**10.09 .2018**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சியில் 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய இருப்பதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018–ல் சொல்லப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தற்சமயம் வரி விதிப்பில் உள்ள மண்டல மதிப்பினை திருத்தம் செய்யலாம். நகராட்சி பகுதி, பகுதியின் உபயோகம் கட்டுமானங்களின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்கனவே உள்ள நான்கு மண்டலங்களில் D மண்டலத்தை நீக்கம் செய்து மூன்று மண்டலமாக கீழ்கண்டவாறு உயர்வு செய்யலாம். உயர்வு செய்யப்பட்டுள்ள மண்டலங்களின் மதிப்பு விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மண்டலம் | பழைய மதிப்பு | 01.04.2018 முதல் திருத்தம் செய்யப்படும் மதிப்பு |
|---|---|---|
| A | ரூ.1.10 | ரூ.1.65 |
| B | ரூ.0.85 | ரூ.1.30 |
| C | ரூ.0.60 | ரூ.0.90 |
| D | ரூ.0.40 | D Zone முழுவதும் நீக்கம் செய்து C Zone –ல் சேர்க்கப்பட்டுள்ளது. |

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018–ன்படி மண்டலம் மதிப்பை மேற்கண்டவாறு திருத்தி அமைத்து அதன்படி 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும் புதிய வரி விதிப்பினை நடைமுறைப்படுத்தவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

(கோப்பு எண்.3489/2018/அ3)

**பொருள் எண்.2**

நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி பொதுசீராய்வு செய்யப்பட வேண்டும் எனஅரசு ஆணை எண்.73, நாள்.19.07.2018 மற்றும் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018–ல் வெளியிடப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.23.07.2018–ல் பல தெளிவுரைகள் வழங்கியுள்ளார்கள். அதன்படி திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் சொத்துவரி பொதுசீராய்வு செய்யும் பொருட்டு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் பதிவேடுகள், படிவங்கள் மற்றும் செய்திதாள்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3489/2018/அ3)

**<u>பொருள் எண்.3</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் 2011–12 முதல் 2017–18 வரை மேற்கொள்ளப்பட்ட திட்ட பணிகளை தொகுத்து ஆணையாளர் அறிவுரையின்படி தமிழ்முரசு சுதந்திர தின தொழில்மலரில் ஒரு பக்க அளவில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.13,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று விளம்பரம் செய்ததை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3258/2017/இ1)

**<u>பொருள் எண்.4</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி **2018–19**ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு **06.09.2018** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| வார்டு எண்.1 கொல்லுமேடு சுப்ரமணி வீடு முதல் ஒர்க்ஷாப் சாலை வரை தடுப்பு சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 13,30,000/- | 1. P.சிவபெருமாள் | (-) 0.02% குறைவு |
| | | 2. P.பரமசிவம் | (+)1.00 % அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ.**13,300** வீதம் செலுத்தி சலான் இணைத்துள்ளனர்.

2) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(–) **0.02**% குறைவாக கொடுத்துள்ள திரு.P.சிவபெருமாள் அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு. எண்**3539/2018**/இ1)

**<u>பொருள் எண்.5</u>**

பொது நிதி **2018–19**ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு **06.09.2018** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சி புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் புதியதாக 6 எண்ணிக்கையிலான கடைகள் கட்டுதல். | 12,00,000/- | 1. கே.குமார்<br>2. கே.செந்தில்முருகன் | (-) 0.25% குறைவு<br>(+)0.36 % அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ.**12,000** வீதம் செலுத்தி சலான் இணைத்துள்ளனர்.

2) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(–) **0.25%** குறைவாக கொடுத்துள்ள திரு.கே.குமார் அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு. எண்**3625/2018**/இ1)

**<u>பொருள் எண்.6</u>**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN34 D3973 வாகனத்தின் பழுதுகளை நீக்கி தகுதி சான்று புதுப்பித்துக் கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், சங்ககிரி ரோடு, திருச்செங்கோடு.. | ரூ.**98263/–** |
| 2 | சுப்ரீம் கார்ஸ்,<br>பரமத்தி ரோடு,<br>நாமக்கல். | ரூ.**103313/–** |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீ பெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.**3695/2018**/எச்2)

**பொருள் எண்.7**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள Canon Xerox Machine-க்கு 2018–2019 (20.09.2018 முதல் 19.09.2019 வரை) ஆண்டு பராமரிப்பு பணி (Annual Maintenance ) மேற்கொள்ள COMTECHR சேலம் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.6,500/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.12352/2015/இ1)

**பொருள் எண்.8**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.26, நரிப்பள்ளம் கந்தம்பிள்ளையார் கோவில் தெருவில் உப்பு தண்ணீர் பைப்லைன் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் புதியதாக உப்புதண்ணீர் பைப்லைன் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4263/2018/இ2)

**பொருள் எண்.9**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.26 TURIP 2017–2018 திட்டத்தின் கீழ் புதியதாக தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் அம்பேத்கார் சிலை முதல் பெருமாள் கோவில் வரை சுமார் 225 மீட்டர் நீளத்திற்கு 110 மில்லிமீட்டர் விட்டமுள்ள புதிய குடிநீர் குழாய் அமைத்தல் இப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்க முடியும். எனவே மேற்கண்ட இடத்தில் புதியதாக குடிநீர் குழாய் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4264/2018/இ2)

**பொருள் எண்.10**

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல் பிரிவில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேல் நடைபெறும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை E-Procurement Website-ல் பதிவேற்றம் செய்ய தேவைப்படும் நகராட்சி பொறியாளர் பெயரில் உள்ள E Tender E Token ஆகஸ்ட் 2018 மாதத்துடன் காலாவதி ஆகிவிட்டதால் புதியதாக நகராட்சி பொறியாளர்க்கு E-Token ஐ Digital Identity, Trichy நிறுவனத்திடம் இருந்து வாங்க ஆகும் செலவினம் ரூ.2,600/—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ரூ.2,600/—ஐ Digital Identity நிறுவனத்திற்கு ச.பிரகாஷ் இளநிலை உதவியாளர் செலுத்தியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5113/2017/இ1)

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேகரமாகும் குப்பைகளை சமன் செய்ய 18.08.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ.எண் | விலைப்புள்ளிதாரார் பெயர் மற்றும் முகவரி | பணி நேரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பி.ஈஸ்வரமூர்த்தி எர்த் மூவர்ஸ், மோரூர் | ஒரு மணி நேரம் | ரூ.1300/— |
| 2 | அம்மன் எர்த் மூவர்ஸ் | ஒரு மணி நேரம் | ரூ.1400/— |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் மிகக்குறைந்த விலைப்புள்ளி கோரிய பி.ஈஸ்வரமூர்த்தி எர்த்மூவர்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும், செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.3696/2018/எச்1)